1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தற்போதைக்கு திட்டம் ஏதுமில்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீப்பத்துறை கிராமத்திற்கும், ராவந்த வாடி கிராமத்திற்கும் மத்தியில் இந்த ஓடை இருக்கிறது. இதற்கு கல்லுக்கட்டு பள்ளம் என்றே பெயர். சாலையை இரு துண்டு களாக பிரிக்கிறது. மழைக்காலங்களில் காட்டாற்று வெள்ளம் அதில் வருவதால் மக்கள் கூட அந்த வழியாக செல்ல முடியாது போக்குவரத்துப் பேருந்துகள் அறவே செல்ல முடியாது. உணவு அமைச்சர் அவர்கள் செங்கம் வந்து மக்கள் நலப் பணிகளை துவங்கியபோது அவருடைய காரும் கூட அந்த இடத்திலே மாட்டிக் கொண்டது. அப்போது நான் பொதுப்பணித்துறை அமைச்சரிடம் பரிந்துரை செய்கிறேன் என்று அவரே சொன்னார். எனவே அமைச்சர் அவர்கள் இதை கனிவன்புடன் பரிசிலிப்பாரா எனகேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் இந்த கல்லுக்கட்டு பள்ளம் என்ற ஓடையிலே நீர் வருகின்ற காலங்களில் ஒரு 3,4 நாட்களுக்கு போக்குவரத்து பாதிக்கப்படுகிறது என்பது அரசி னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு 20 லட்சம் ரூபாய் மதிப்பீடு என்று மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு ஆண்டும் எல்லா பாலங்களையும் கட்டிவிட முடியாது என்ற சூழ்நிலையில் தான் நான் திட்டம் ஏதும் இல்லையென சொன்னேன். இருந்தாலும் அந்தச் சாலையினுடைய போக்குவரத்துப் பிரச்சினையை கருதி இதுபோன்ற பாலங்கள் கட்டுகின்ற பிரச்சினைகளில் நிதி ஆதாரத்திற்கு உட்பட்டு பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிமித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 530, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

530—

ஒரத்தூர் பெரிய வாய்க்கால் கரையில் வண்டிப்பாதை அமைத்தல்.

*10621 திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதலூர் ஊராட்சி ஒன்றியம், ஒரத்தூர் பெரிய வாய்க் கால் கரையில் வடக்குத் தெரு பாலத்தில் இருந்து செருகுடி வரையிலும் (1 கி.மீ. தூரம்) வண்டிப்பாதை அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், ஒரத்தூர் பெரிய வாய்க்கால் கரையில் வடக்குத் தெரு பாலத்தில் இருந்து செருகுடி வரையிலும் (1 கி.மீ. தூரம்) வண்டிப்பாதை அமைப்பதற்கு போதிய நிதி ஆதாரமின்மையால், அப்பணிக்கான செயற்குறிப்பேதும் தற்போது இல்லை.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அமைச்சர் அவர்கள் இப்பொழுது செயற்குறிப்பு ஏதும் இல்லையென்று கூறினார்கள். ஒரத்தூர் பெரிய கிராமம். வாய்க்கால் கரையில் இருந்து தான் தானியங்கள் எல்லாம் கொண்டு வரவேண்டும். ஆகையினால், இந்த ஆண்டு இதை எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இது பற்றி பரிசீலனை செய்யும்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தூர் கிராமத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரமுள்ள செருகுடி என்ற பகுதியில் 300 ஏக்கருக்கு மேல் விவசாயம் நடந்துகொண்டிருக்கிறது. அங்கிருந்து விளைகிற நெல், மற்ற தானியங்களை எல்லாம் விவசாயிகள் எடுத்துக் கொண்டு, அந்தக் கரைமேல் வர வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே மழைக் காலங்களில் அந்தக் கிராம விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே வரும் ஆண்டிலாவது ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அந்தத் திட்டத்தை எடுத்து, செயற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், ஒரத்தூர் பெரிய வாய்க்கால் கரையில் வடக்குத் தெரு பாலத்திலிருந்து செருகுடி வரையிலும் 1 கிலோமீட்டர் தூரம் புதிதாக சாலை அமைக்க 150 சென்ட் நிலம் தேவைப்படும். இதனை வாங்குவதற்கும், அந்தச் சாலையை அமைக்கவும் சுமார் 1,60,000 ரூபாய் தேவைப்படும். இந்த ஆண்டு இதனை எடுத்துக்கொள்ள, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு அறிவுரை வழங்கப்படும்.

1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 531, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

531

நகரங்களில் கூட்டுறவு பண்டகசாலை தொடங்கும் திட்டம்.

*16727—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரங்கள்தோறும் கூட்டுறவு பண்டகசாலை (Super Market) தொடங்க அரசிடம் திட்டம் உள்ளவதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இம்மாநிலத்தில் 14 மாவட்டங்களில் 34 கூட்டுறவு சிறப்பங்காடிகள் (Super Markets) பல்வேறு நகரங்களில் அமைந்துள்ளது. நகரங்கள்தோறும் கூட்டுறவு பண்டகசாலை தொடங்க தற்போது திட்டம் இல்லை.

(ஆ) எழவில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவே நாட்டுயர்வு, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பழமொழிக்கேற்ப செயல்படுகிற தமிழக அரசு, பொருள்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கவும், நியாய விலையில் குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கவும் எல்லா நகராட்சிகளிலும், எல்லா பேரூராட்சிகளிலும் கூட்டுறவுப் பண்டக சாலைகளை ஏற்படுத்த மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சிறப்பங்காடிகள் எங்கெங்கே அமைக்கலாம் என்பதற்கு அளவுகோல் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆர்டர்.